# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 07.08.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10389/SCIC/2024**

திருமதி T. கலையரசி — மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல்துணை ஆணையாளர், ....... பொதுஅதிகார அமைப்பு
சென்னை பெருநகர காவல் ஆணையரகம்,
E.V.K, சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை 07

**ஆணை**

இவ்வழக்கானது ஏற்கனவே 13.07.2026 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்டவாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

- **மனுதாரரின் மனுவில் கோரிய இனங்களுக்கு சரியான / திருத்திய இனவாரியான பதிலினை 15 தினங்களுக்குள் விரைவுத்தபால் மூலமாக மனுதாரருக்கு அனுப்பிவிட்டு, அந்த அறிக்கையுடன் மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் 07.08.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**
- **மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் 18.03.2024 தேதியிட்டு மனு அளித்துள்ள நிலையில், தற்போது வரையில் அவருக்கு பொதுத் தகவல் அலுவலரால் சரியான தகவல்கள் வழங்கப்படாத காரணத்தினால், இந்நிகழ்வில் ஏற்பட்ட காலதாமதத்திற்காக**

**பொது அதிகார அமைப்பானது சட்டப்பிரிவு 19(8)(b)ன் கீழ் ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறும், மேற்படி இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினையும் 07.08.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்று விசாரணைக்கு ஆஜரான அலுவலர் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டும்.**

2. அதனைத்தொடர்ந்து இன்று (07.08.2026) பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு ஜானகிராமன், கண்காணிப்பாளர், காவல்துணை ஆணையர் அலுவலகம், சென்னை பெருநகர காவல் ஆணையரகம், வேப்பேரி, சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் 13.07.2026 தேதியிட்ட ஆணையத்தின் உத்தவிற்கிணங்க, 14.07.2026 தேதியிட்டு திருத்திய பதிலினை மனுதாரருக்கு அனுப்பியதாகத் தெரிவித்து, அக்கடித நகலினையும், மேற்படி தகவல்களை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல்துறையின் ஆதாரத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

3. மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க ரூ.1000/. (ரூபாய் ஆயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டதாகவும், மேற்படி இழப்பீட்டுத் தொகையினைத் தெரிவித்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அறிக்கையினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். ஆகவே, ஆணையத்தின் உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், **இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

தகவல் சட்டம் 2005
அறியும் உரிமைச்

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளருக்காக**

**<u>வழக்கு எண். SA 10389/SCIC/2024</u>**

பெறுநர்
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்,
காவல்துணை ஆணையாளர்,
சென்னை பெருநகர காவல் ஆணையரகம்,
E.V.K, சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை 07

**மனுதாரர்**

Tmt T. Kalaiarasi,
23/57, 6th Street,
Annai Sivagami Nagar,
Ennore, Chennai 600 057

TK/PS